*6*

# கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் ஒப்புரவாகுதல்

## (2:11-13)

*கிறிஸ்துவின் மகிமையுள்ள சபையின் நோக்கம் பற்றி எபேசுப் பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகிறபோது, அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை அவர் வலியுறுத்தினார். அது ஒரு மறு - சிருஷ்டிப்புக்கு ஒப்பானதும், அவர்களுடைய நிலையில் யூதர்களுக்குள்ளும் புறஜாதி யாருக்குமிடையே நிலவும் சகோதரத்துவமும் ஒரு பகுதி.*

## முன்னே கிறிஸ்துவைச் சேராதவர்களாயிருந்தனர் *(2:11, 12)*

**11 ஆனபடியினாலே முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள்,**
**12 அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்.**

**வசனம் *11.*** புறஜாதிக்கிறிஸ்தவர்களின் முந்தின நிலையைக் குறித்து வலியுறுத்தின பவுல் **புறஜாதியாருக்கும்** யூதர்களுக்குமிடையே உள்ள முரண்பாட்டைக் குறிப்பிடுகிறார். **ஆகையால்** (டையோ) என்ற வார்த்தையின் பயன்பாடு, முந்தின பத்தியில் குறிப்பிட்டவைகளுடன் இணைந்து பேசப்படுகிறது, அந்த வசனப் பகுதி கிறிஸ்தவர்கள் விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்பட்டவர்களாதலால் நற்கிரியைகளை அவர்கள் நடப்பிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதைச் சொல்லி முடிக்கிறது. இப்பொழுது வசனம் *11*ல் பவுல் குறிப்பிடும் முரண்பாடு புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு செயலூக்கம் கொடுத்து கிறிஸ்து மூலமாய் தேவன் அவர்களுக்குச் செய்தவை நிமித்தம் ஆழமான பாராட்டை சொல்ல வேண்டியவர்களாயும் நேர்மையாக அவர் தங்களை அபிஷேகம் பண்ணினமைக்கு ஏற்ற ஜீவியத்தை பெரிதும் ஜீவித்துக் காட்ட வேண்டியவர்களாயுமிருக்க வலியுறுத்துகிறது.

**மாம்சம்** (*sarx*) மாமிசப் பிரகாரமான சரீரத்தைக் குறிப்பிடுகிறது (காண்க ரோமர் *1:3*). மற்றும் மனித சுபாவத்தின்படியான பாவநிலையையும் கூட

சுட்டிக் காட்டுகிறது (காண்க ரோமர் 8:1-12). வசனம் 11ல், வார்த்தை நேரடியாக மாம்ச சரீரத்துக்கு குறிப்பிடப்படுகிறது, அந்த ஒரு **சரீரம் மாம்சப் பிரகாரமான மனித கையினாலே** விருத்தசேதனம் செய்யப்படக் கூடியது என்றும் குறிப்பிகிறது.

யூதர்கள் தாங்கள் **விருத்தசேதனம் உடையவர்கள்** என்றும் புறஜாதிகளை **"விருத்தசேதனம் இல்லாதவர்கள்"** என்றும் சிறுமைப்படுத்திப் பேசினார்கள், இது, ஆபிரகாமில் துவக்கம் பெற்று இஸ்ரவேலில் பிறந்த சகல ஆண் பிள்ளைகளுக்கும் பிறந்த எட்டாவது நாளில் விருந்தசேதனம் செய்வித்தனர் (காண்க ஆதியாகமம் 17:1-27; லேவியராகமம் 12:3). விருத்தசேதனம் தேவன் ஆபிரகாம் மூலம் இஸ்ரவேலரிடம் செய்த உடன்படிக்கையின் அடையாளம், மாம்சப் பிரகாரமாய் செய்யப்பட்ட விருத்தசேதனம் யூதன் இஸ்ரவேலருக்கு உரியவன் என்று அறிவித்தது. இந்த உடன்படிக்கையின் அடையாளம் உடன்படிக்கையின்படி வாழ்வதும் அத்துடன் கோரப்பட்டது (காண்க எரேமியா 9:26). விருத்தசேதன முறைமை யூதருக்கு மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது, அதினால்தான் ஆதிசபையில் மனமாற்றப்பட்ட புறஜாதிகள் விருத்தசேதனம் பெறுவதும் அவர்களுடைய மனமாற்றத்தில் ஒரு பகுதியா இல்லையா என்ற சர்ச்சை மிகப் பெரிய முரண்பாடாக இருந்துள்ளது. இந்த விஷயம் குறித்து விவாதிக்க எருசலேமிலே ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதிகமான விவாதத்திற்குப் பின்பு அப்போஸ்தலர்கள், மூப்பர்கள் மற்றும் வேறு சில சகோதரர்களும் விருத்தசேதனம் உட்பட எந்த ஒரு பாரத்தையும், நியாயப்பிரமாண சுமையையும் மனமாற்றம் பெறும் புறஜாதிகள் மேல் வைக்கக் கூடாது என்று தீர்மானித்தார்கள் (நடபடிகள் 15:1-35).

**வசனம் 12.** புறஜாதியாயிருந்து மனமாற்றப்பட்டவர்களின் முந்தின நிலையைக் குறித்துப் பேசின பவுல், அவர்களைக் குறித்து ஐந்து உண்மைகளை வரிசைபடுத்துகிறார். முதலாவதாக, அவர்கள் **கிறிஸ்துவைச் சேராதவர்களாய்** இருந்தனர். கிறிஸ்தவர்களல்லாதவர்கள் பாவத்தினால் தேவனிடத்திலிருந்து பிரிந்திருக்கிறார்கள் (ஏசாயா 59:1, 2); சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்திருப்போர் மட்டுமே கிறிஸ்துவுடனே கூற நட்புறவு கொண்டிருக்க முடியும். இந்த வசனப்பகுதியில் பவுலின் வலியுறுத்தல் என்னவெனில் புறஜாதிகளுக்கு மேசியா வருவதைக் குறித்து முன்னுரைத்த வேதவாக்கியம் எதுவுமில்லை, ஆகையால், யூதர்களுக்குச் சொல்லப்பட்ட மேசியாவைக் குறித்த பங்கு அவர்களுக்கு இருக்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, மேசியா இஸ்ரவேலர்கள் மூலமே வந்தார் (ரோமர் 9:4, 5).

இரண்டாவதாக, **இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்.** "காணியாட்சி" என்பது கிரேக்க வார்த்தையான *politeia,* என்பதன் மொழிபெயர்ப்பு, அதன் பொருள் *"ஒரு நிலை"* அல்லது *"குடியுரிமை, ஒரு குடிமகனுக்குரிய உரிமைகள்."*[1] மனமாற்றப்பட்ட புறஜாதிகளுக்கு அவர்களுடைய முந்தின நிலைமையிலே தேவனோடு எந்தக் குடியுரிமையையும் அவர்கள் அனுபவிக்க வில்லை. கிறிஸ்து வருவதற்கு முன் யூதர்கள் ஒரு தேவபக்தியுள்ள நாடாக தேவனோடு உண்மையான நட்புறவு கொண்டிருந்தார்கள். புறஜாதிகளுக்கு அப்படியொரு நட்புறவு கிடைத்திருக்க வில்லை. தேவனுடைய மகத்துவமான தெரிவினால் அவர் இஸ்ரவேலருடன்

ஒரு உடன்படிக்கையில் இணைக்கப்பட்டார் ஆனால் புறஜாதிகளுடன் எவ்வித பந்தத்திற்குள்ளாகவும் நுழையவில்லை. புறஜாதிகள் இஸ்ரவேல் தேசத்தாருடன் சேர்க்கப்பட வில்லை. "சேராதவர்கள்" (*apallotrioō*) என்பது "பிரிவை உண்டாக்குதல்" என்ற பொருளைக் கொடுக்கிறது.[2] இந்த வார்த்தை தோன்றும் மற்ற வசனங்கள் கொலோசெயர் 1:21 மற்றும் எபேசியர் 4:18, இவை "முன்பு உறவு முறையில் இருந்த ஒருவர் இப்போது பிரிந்திருப்பது போல பேசுகிறது."[3] எப்படியிருப்பினும், நாம் வாசிக்கிற இந்த வசனப் பகுதியில், விசேஷித்த சிலாக்கியங்களிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வழிவராத ஜனங்களோடு பழைய ஏற்பாட்டின் வரலாற்றில் அவ்வப்பொழுது தேவன் நட்புறவு கொண்டிருக்கத்தான் செய்தார் (ஆதியாகமம் 14ல் மெல்கிசெதேக்; யாத்திராகமம் 2; 3 ல் எத்திரோ; எண்ணாகமம் 22; 23 ல் பிலேயாம்).

மூன்றாவதாக, புறஜாதிகள் **வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியராயிருந்தனர்.** கிரேக்க வசனப் பகுதியில் "வாக்குத்தத்தம்," என்ற வார்த்தைக்கு முன் "அந்நியர்," என்கிற அடுத்து வரும் பெயர்ச்சொல் குறிப்பிடப் பட்டுள்ளது, "வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியரும்." "அந்நியர்" என்பது கிரேக்கப் பெயர்ச்சொல்லாகிய *xenos* எனும் வார்த்தையினால் விளக்கப்படுத்தப்படுகிறது. "அதாவது ஒருவரது சொந்தக் குடும்பத்தில் சேராதவர்"[4] மற்றும், ஆதலால் ஏதோ ஒன்றில் "பங்கு இல்லாதவர்."[5] "வாக்குத்தத்தம்" என்பது தேவன் வருகிற (வரவிருந்த) இரட்சகரைக் குறித்து முற்பிதாக்களுடன் செய்த வாக்குத்தத்தத்தை குறிப்பிட்டாக வேண்டும் (காண்க ஆதியாகமம் 12:1-7; 22:18; 26:4; 28:14). தேவன் "உடன்படிக்கைகளை," அல்லது "ஒப்பந்தங்களைச்" செய்தார்,[6] அதை ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும், மற்றும் தாவீதோடும் செய்தார். பவுல் மோசேயின் பிரமாணத்தைக் குறிப்பாகச் சொல்லவில்லை, ஏனெனில் பிரமாணம் இந்த ஆதிகால உடன்படிக்கைகளோடு "கூட்டப்பட்டது" (கலாத்தியர் 3:19). கலாத்தியர் 3:16-22 ல், ஆபிரகாமிடம் செய்த வாக்குத்தத்தத்தையும் சீனாய் மலை வாக்குத்தத்தத்தையும் அவர் வித்தியாசமாக்கி முந்தினது வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை என்றும் பிந்தினதை பிரமாணத்தின் உடன்படிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நான்காவதாக, அவர்கள் **நம்பிக்கையற்றவர்களாயிருந்தனர்,** தெரிந்து கொள்ளப்பட்ட தேசமாகிய இஸ்ரவேலுக்குப் புறம்பே, புறஜாதிகளுக்கு தேவனோடு உடன்படிக்கையின்படியான உறவுமுறை இருக்க வில்லை மற்றும் வரவிருந்த மேசியாவைக் குறித்த வாக்குத்தத்தம் உடன்படிக்கையும் இருக்க வில்லை. ஒரு இரட்சகரைப் பற்றியோ இரட்சிப்பைப் பற்றியோ அவர்களுக்கு நம்பிக்கையிருக்கவில்லை. புறஜாதியாருடைய அஞ்ஞான மதங்கள் தங்களுடைய எதிர்கால ஜீவனைக் குறித்த ஏக்கத்தை பிரதிபலித்தன, ஆனால் பவுல் அவர்கள் நம்பிக்கையில்லாதிருந்த *உண்மையைக்* குறித்து பேசினார். அவர்களுக்கென மரணத்துக்குப் பின்பு ஒரு வாழ்வை உண்டு என்ற நம்பிக்கையிருக்குமானால் அது உண்மைக்குப் புறம்பாக திரித்துக் கூறப்பட்டதும் பொய்யானதுமான நம்பிக்கையுமாகும். அவர்கள் தேவனைக் குறித்து அளவிடப்பட்ட அறிவை மட்டுமே கொண்டிருந்தனர், மற்றும் அவர்கள் மரண சாதன வேத வசனங்களிலிருந்தும் மேசியாத்துவ

வாக்குத்தத்தங்களிலிருந்தும் விலக்கப்பட்டிருந்தனர். புறஜாதிக் கிறிஸ்தவர்கள், அவர்களுடைய முந்தின நிலைமை அவர்களுக்கு நினைப்பூட்டப்பட்ட நிலையில், "கிறிஸ்து (அவர்களுக்குள்) இருப்பதால்" இப்பொழுது அவர்களுக்கு நம்பிக்கை உண்டாயிருக்கிறது என்பதால் இன்னும் அதிகமாகப் பாராட்டுவார்கள் (கொலோசெயர் 1:27).

ஐந்தாவதாக, அவர்கள் இந்த **உலகத்தில் தேவனற்றவர்களாயிருந்தார்கள்.** அவர்களின் ஆளுகை "இவ்வுலக வழக்கத்துக்கேற்றதாயிருந்தது" (2:2), இது தேவனிடத்திலிருந்து பிரிந்திருந்த ஒரு உலகம். பொய்யான தேவர்களை சேவித்த அவர்களை உண்மையான தேவனற்றவர்களாகவும் உண்மையான நம்பிக்கையற்றவர்களாகவும் விட்டுவிட்டது. கலாத்தியர் 4:8 ல், புறஜாதிக் கிறிஸ்தவர்களின் முந்தின நிலையை பவுல் விவரித்துப் பேசினார்: "நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாத வர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்." புறஜாதிகள், உண்மையான தேவனை அறியாமலிருந்தபடியால், "தேவனற்றவர்களாயிருந்தனர்" (*atheos*). பவுலின் மதிப்பீட்டின்படி அவர்களுடைய நிர்பந்தமான சூழ்நிலை அவர்களை தேவனற்றவர்களாகவும் உலகில் நம்பிக்கையற்றவர்களாகவுமாக்கியிருந்தது.

## கிறிஸ்துவுக்குள் சமீபமானார்கள் (2:13)

***13முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.***

**வசனம் 13.** நிச்சயமாக பவுல் புறஜாதிக்கிறிஸ்தவர்களுக்கான நற்செய்தி யையும் கொண்டிருந்தார். வசனம் 4 "தேவனோ." என்ற வார்த்தையில் துவங்குவது எபேசியர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு முன்பிருந்த நிலைக்கும் கிறிஸ்துவுக்குள் இருக்கிற நிலைக்கும் இடையே உள்ள அனைத்து வித்தியாசங்களையும் ஏற்படுத்துகிறது, அதுபோலவே வசனம் 13 **இப்பொழுது** எனும் வார்த்தையைக் கொண்டுள்ளது. வசனங்கள் 13 லிருந்து 22 வரை சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிவதற்கு முன்னிருந்த கூர்மையான முரண்பாட்டை விளக்குவதாயுள்ளது. **"முன்னே"** எனும் வார்த்தை "இப்பொழுது" என்பதற்கு முரணானது. **தூரமாயிருந்த** என்பதும் **சமீபமானீர்கள்** என்பதும் இந்த மனமாற்றப்பட்ட புறஜாதிகள் **கிறிஸ்துவுக்குள்** இருந்தார்கள் என்ற உண்மையை தெளிவாக்குகிறது.

பழைய ஏற்பாட்டில், புறஜாதிகள் தூரத்திலிருந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டார்கள் (காண்க உபாகமம் 29:22; 1 இராஜாக்கள் 8:41; எரேமியா 5:15), இஸ்ரவேலர்கள் சமீபமாயிருப்பவர்கள் என்று கூறப்பட்டனர் (சங்கீதம் 148:14). ஆகிலும், சமீபமானீர்கள் என்று எபேசியர் 2 ல் சொல்லப்படுவது புறஜாதிகள் யூதர்களாகிய இரு சாராரையும் சுட்டிக் காட்டுகிறது, அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிதாய்க் கட்டப்பட்ட விசுவாசமுள்ள சமுதாயம், என்று எபேசியர் 2 ம் அதிகாரத்தின் பின்பகுதி காட்டுகிறது.

இப்போதுள்ள சாத்தியக்கூறு **கிறிஸ்துவின் இரத்தத்தினாலே** யூதர்களும் புறஜாதிகளும் சமீபமாய் வரவழைக்கப்பட்டார்கள். இது கிறிஸ்து

*“பாவமன்னிப்பிற்கென்று அநேகருக்காக” இரத்தம் சிந்திய இடமாகிய சிலுவையை சுட்டிக்காட்டுகிறது (மத்தேயு 26:28). சிலுவையின் செய்தி, கிறிஸ்து தமது மரணத்தில் நமது பாவங்களை தம்மீது ஏற்றுக் கொண்டு அவருடைய நீதியை நாம் ஏற்றுக் கொள்ளச் செய்தார் என்ற உண்மையை உள்ளடக்குகிறது (காண்க 2 கொரிந்தியர் 5:21). பாவிகளாக இருந்த நாம், நீதிக்கென்று எந்த உரிமையும் அற்றவர்களாயிருந்தோம் (ரோமர் 6:20). நீதியற்றவர்களாய் இருந்தபடியினாலே, தேவன் தமது நீதியுள்ள செய்கையினாலே நம்மை நீதிமான்கள் என்று அறிவித்தாலொழிய மற்றும் அறிவிக்கும் வரை தேவனோடு நாம் நட்புறவு வைக்க முடியாது.*

*பவுல் “சமீபமானீர்கள்,” என்று பேசியபோது, தேவனுக்கு அருகாமையில் தேவனிடத்தில் கொண்டு வரப்படுவதையே அவர் குறிப்பிட்டார். எபிரெயருக்கு எழுதின எழுத்தாளர் குறிப்பிடுகையில் “நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது” என்று சொன்னார் (எபிரெயர் 10:19). பின்பு அவர் “அவரிடத்தில் சேரக் கடவோம்” என்று அவர்களை ஊக்கப்படுத்தினார் (எபிரெயர் 10:22). பரிசுத்த தேவன் நம்மை அவருக்குச் சமீபமாய் வரும்படி அழைக்க முடியும் ஏனெனில் அவரிடத்தில் அணுக ஏதுவான - கிறிஸ்துவின் இரத்தத்தை நமக்கு கையளித்திருப்பதன் மூலம் நாம் நெருங்கிச் சேரலாம். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது, நாம் நீதிமான்களாக்கப்பட்டவர்களாய், நீதிமான்கள் என்று அறிவிக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம் ஏனெனில் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறோம். தேவன் பாவத்தின் மீது தமது கோபாக்கினையை சிலுவையிலே செலுத்தி அதினாலே ஞானஸ்நானத்தின்போது அவர் தமது இரக்கத்தை பாவிகள்மேல் ஊற்றினார். தேவன், ஆகையால், பாவிகளை நீதிமான்களாக்குவதில் நீதியுள்ளவராயிருக்கிறார் (ரோமர் 3:26), சிலுவையின் இரத்தம் அவருடைய பரிசுத்த நடக்கையின் கோரிக்கையைச் சந்தித்தது.*

*இந்த இடத்தில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கப்பட வேண்டும்: பாவிகளை நீதிமான்களாக்க இரத்தம் ஏன் அவசியமானது? பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் மிருகபலிகளின் இரத்தம் செலுத்தப்பட்டு வந்தது. அந்தக் கால் நடைகளின் இரத்தம் பாவத்தைப் போக்கவில்லையெனக் காண்பிக்கும் பொருட்டு, அந்த பலிகள் மறுபடியும் மறுபடியும் செலுத்தப்பட்டன (எபிரெயர் 10:1-4). இருப்பினும் கால்நடைகளின் பலிகள் உண்மையான தேவ ஆட்டுக் குட்டியானவரான இயேசு கிறிஸ்துவைக் காட்சிப்படுத்தின. அந்த தேவ ஆட்டுக் குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் ஒரே முறை பலி நித்திய பாவ நிவர்த்தி செய்யக் கூடியதாயிற்று (யோவான் 1:29; எபிரெயர் 10:10-14). உலகத்திற்கு மீட்பைக் கொண்டு வர அவரது இரத்தம் ஏன் அவசியமானதாயிருந்தது? நியாயப்பிரமாணத்தின் கீழ் செலுத்தப்பட்ட பலியை விளக்கப்படுத்தி, லேவியராகமம் 17:11 ல் சொல்லுகிறது, “மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது.” தமது இரத்தத்தை இயேசு சிந்தினதின் மூலம், இயேசு நமது நிறைவற்ற வாழ்விற்கு நிறைவான ஜீவியத்தைக் கொடுத்தார். ஆவிக்குரிய முறையிலும் நித்தியத்திலும் நாம் வாழும்படிக்கு - அவர் தமது இரத்தத்தை சிந்தி மரித்தார்.*

## பயன்பாடு

***கிறிஸ்துவுக்குள் ஆசீர்வாதங்கள் (2:13)***

*எபேசியர் 2 ல் சொல்லப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவுக்குள் மட்டுமே இருக்கிறது (2:13). ஒவ்வொரு தனிநபருக்கும் தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை ஆகியவை சிலுவையிலே கிறிஸ்து பலியானதன் மூலம் அளிக்கப்பட்டுள்ளது, அதை ஏற்றுக்கொள்ள ஒவ்வொரு தனிநபரும் அழைக்கப்படுகிறார். கீழ்ப்படிதலோடு ஏற்றுக் கொண்டு வருகிறவர்கள் தேவனிடத்திலிருந்து அந்நியமாக்கப்படுவதிலிருந்து இரட்சிக்கப்படுவார்கள். அவர்கள் தேவனுடைய நிபந்தனைகளை ஏற்று இரட்சிப்படைய விசுவாசித்து, உறுதியான நம்பிக்கை கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிகின்றனர். விசுவாசத்துடன் பதில் செய்வதில் "இயேசு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்பண்ணப்படுவதும்" உள்ளடங்கும் (ரோமர் 6:3), அங்கேதான் இரட்சிப்பு காணப்படுகிறது. இப்படியாக தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்வது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே "விசுவாசத்தைக் கொண்டு ... கிருபையினாலே" இரட்சிக்கப்படுவதில் பலனடைகிறது (2:8).*

*ஜெய் லோக்ஹார்ட்*

---

*குறிப்புகள்*

[1]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 528; see also Walter Bauer, *A Greek- English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 845. [2]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 137. [3]Ibid. [4]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 741. [5]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 73. [6]Bullinger, 192.